விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 13 ஞாயிற்றுக்கிழமை (29.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 222




## பிரபாகரனின் தேவையை ஈடுசெய்வதற்கு ரணில்-மங்கள, சிறிபதி இணைந்து முயற்சி

### அரசாங்கம் பகிரங்கக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கை கைப்பற்றிய இராணுவம் வடக்கிற்கு நகர்வதற்கு தயாராகின்ற போது ஐக்கிய தேசியக் கட்சியும் இதர குழுக்களும் தெற்கில் மாற்று சிந்தனைகளை ஏற்படுத்துவதற்கு முயற்சிசெய்கின்றன என்றுபிரதிக் கல்வி அமைச்சர் நிர்மல கொத்தலாவல குற்றம்சாட்டியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு முக்கியஸ்தர்களான மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராச்சி ஆகியோர் இணைந்து பிரபாகரனின் தேவைகளை ஈடு செய்வதற்கு முயற்சிக்கின்றனர் என்றும் அவர் (06 ஆம் பக்கம் பார்க்க)

## அஞ்சல் திணைக்கள ஊழியர்கள் நாளை சுகவீன லீவுப் போராட்டம்

(கொழும்பு)

தபால்துறையில் காணப்படும் நிர்வாக ஊழல் மற்றும் ஏனைய நான்கு விடயங்களை வலியுறுத்தி அஞ்சல் திணைக்கள ஊழியர்கள் நாளை சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இப்போராட்டம் இன்று நள்ளிரவு முதல் நாளை நள்ளிரவு வரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. தமது கோரிக்கைக்கு உரிய தீர்வு வழக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியே இப்போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக அஞ்சல்துறை ஊழியர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை இப் போராட்டத்தினால் அஞ்சல் விநியோகம் இடம்பெறமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

★ வடக்கைத் தாக்க இந்தியா அனுமதிக்காது

-ஹரி குணதிலக

★ அரச 'வெற்றி' தோல்வியாக மாறும்

-ஒலிவர் ரணசிங்க

★ 'யுத்தம்' தீர்வென்போர் முட்டாள்கள்

-டி.சி.பெரேரா

# யுத்தம் வேண்டவே வேண்டாம்

## முன்னாள் வான்படைத் தளபதிகள் மூவர் ராவய வாரப் பத்திரிகைக்குப் பேட்டி



ஹரி குணதிலக

(கொழும்பு)

இலங்கைத் தீவில் யுத்தம் வேண்டவே வேண்டாம். இவ்வாறு இலங்கையின் முன்னாள் வான் படைத் தளபதிகள் மூவர் கருத்துத் தெரிவித்துள்ளனர். சிங்கள வார ஏடான ராவயவுக்கு மூவரும் அளித்துள்ள நேர்காணலில் கூறப்பட்டுள்ள விபரம் வருமாறு, (06 ஆம் பக்கம் பார்க்க)



ஒலிவர் ரணசிங்க



டி.சி.பெரேரா

# முன்னாள் வான்படைத் தளபதிகள் மூவர் ராவய வாரப் பத்திரிகைக்குப் பேட்டி


ஹரி குணதிலக

(கொழும்பு)

**இலங்கைத் தீவில் யுத்தம் வேண்டவே வேண்டாம். இவ்வாறு இலங்கையின் முன்னாள் வான் படைத் தளபதிகள் மூவர் கருத்துத் தெரிவித்துள்ளனர். சிங்கள வார ஏடான ராவயவுக்கு மூவரும் அளித்துள்ள நேர்காணலில் கூறப்பட்டுள்ள விபரம் வருமாறு,** *(06 ஆம் பக்கம் பார்க்க)*


ஒலிவர் ரணசிங்க


டி.சி.பெரேரா

## புலோலியில் ஆயுதங்கள் மீட்பு

பருத்தித்துறை–புலோலி பகுதியில் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி ஆயுதங்களை படையினர் மீட்டுள்ளதாக தேசியப் பாதுகாப்பு ஊடகமத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலையடுத்து இவ் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இதில் தற்கொலைத் தாக்குதலுக்கு அணியும் இரண்டு ஆடைகளும் கிளைமோர்க் குண்டொன்றும் 5 கைக்குண்டுகளும் 4 ரெற்றனேற்றர் கருவிகளும் மீட்கப்பட்டுள்ளதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந–5)

## கிழக்கில் மருத்துவ முகாம் அமெ.கடற்படை நடாத்தும்

கிழக்கில் மருத்துவ முகாம்களை நடாத்த அமெரிக்க கடற்படை மருத்துவர்கள் செப்ரெம்ப்ர் மாதம் வர உள்ளதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

சம்பூர், வாகரை உள்ளிட்ட பல பகுதிகளில் மருத்துவ முகாம்கள் அமைக்க உள்ளனர். இது தொடர்பாக நிலைமைகளை அறிவதற்காக 3 பேர் கொண்ட அமெரிக்க கடற்படையின் மருத்துவக் குழுவினர் தற்போது திருகோணமலையில் முகாமிட்டுள்ளனர். முகாம்கள் அமைக்கப்படும் இடங்களையும் முகாம்களுக்குரிய ஏற்பாடுகளையும் மேற்கொள்ள அவர்கள் தங்கியுள்ளதாக கூறப்படுகிறது. (ந–5)

# இலங்கைத் தமிழ் அகதிகளை பிரித்தானியா திருப்பி அனுப்பக் கூடாது

## அமைச்சர் சந்திரசேகரன் அந்நாட்டுப் பிரதமருக்குக் கடிதம்

(கொழும்பு)

தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழர்களை பிரித்தானியா திருப்பி அனுப்புமானால் அது ஒரு இனத்தின் அழிவிற்கு வித்திடுமென அமைச்சர் பி.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியப் பிரதமர் கோர்டன் பிறவுனுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அக்கடிதத்தில், இலங்கையில் தற்சமயம் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலினால் தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோருகின்றனர்.

இலங்கையில் நடைபெறும் அரசியல் நெருக்கடியிலும் உள்நாட்டு யுத்தத்தின் போதும் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டால் அனுப்பப்படுபவர்களின் உயிருக்கு பாதகம் ஏற்படக்கூடும். இந்நிலையில் இரண்டு நாடுகளும் பேச்சுவார்த்தை நடாத்தி திருப்பி அனுப்பப்படுவோருக்கு உயிர் உத்தரவாதம் வழங்கப்படுமாகவிருந்தால் அதனை சாதகமான காரணமாக ஏற்றுக் கொள்ளலாம் .

இதனை விடுத்து அகதிகளை திருப்பி அனுப்புவதால் ஏனைய நாடுகளும் அதனைப் பின்பற்றக் கூடிய நிலை உருவாகுமென அமைச்சர் சந்திரசேகரன் சுட்டிக்காட்டியுள்ளார். (ந–5)

# மன்னார் கடலில் மோதல்

## ஆறு கடற்புலிகள் பலியானதாக கடற்படையினர் அறிவிப்பு

(கொழும்பு)

மன்னார் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் இரண்டு படகுகளை தாக்கியழித்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. இத்தாக்குதலின் போது 6 கடற்புலிகள் உயிரிழந்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் டி.பி.கே.தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்று மாலை 4.30 மணியளவில் மன்னாருக்கு வடக்கே 7 கடல் மைல் தொலைவில் இலங்கை கடற்படை ரோந்துப் படகுகள் இந்திய மீனவப் படகுகள் கூட்டத்தை அவதானித்தன. அவற்றை விசாரணை செய்வதற்காக கடற்படைப் *(06 ஆம் பக்கம் பார்க்க)*

**ஞாயிறு தோறும் வெளிவரும் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை எழுதும் கட்டுரை நாளைய வலம்புரியில் வெளிவரும்.**

(ஆ-ர்)

**உள்ளே**

கொழும்பு விசாகா வித்தியாலயத்தின்
பரீட்சை வினாத்தாள்
A/L 2007 ஜுலை
இணைந்த கணிதம்

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# கேளுங்கள் கொடுக்கப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்

இவ்வுலகிலே உள்ள ஒவ்வொரு மனிதரின் வாழ்விலும் எது நடக்காவிட்டால் ஒன்று நிச்சயமானது அது தான் இறப்பு. பலவிதமான இன்னல்கள், நெருக்கடிகள், சோதனைகள், வேதனைகள் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டு வருகின்றோம். எவ்வேளையிலும் எதுவும் நடக்கலாம் என்ற பயத்துடனும் அங்கலாய்ப்புடனும் காலங்கழிக்கின்றோம். புனித இஞ்ஞாசியார் கூறுகின்றார் ' உன் துன்பங்கள் அதிகமானால், கடவுள் உன் வழியாய் மிகப் பெரியகாரியங்களைச் செய்ய விரும்புகிறார்'' என்று எம்மினம் அனுபவிக்கின்ற துன்பங்களுக்கு அளவே இல்லை. யாவராலும் கைவிடப்பட்ட நிலையில் இறைவன் ஒருவரே தஞ்சம் என்று எண்ணும் அளவிற்கு எம் நிலை இரங்குதற்குரிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

### இன்றைய நாட்கள்

இன்றைய நற்செய்தி வழியாக இயேசு மொழிகின்றார் ''நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள். நீங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும்'' (லூக் 11:9) நாம் வெறுமனே வாழா இருக்கமுடியாது. எல்லாம் ஈசன் செயலாக இருந்தாலும் முயற்சி செய்யும் போதே பலன் கிடைக்கும். கேட்டு, தேடி, தட்டித் தான் எமக்கானதை பெறவேண்டும் என்பதை இயேசு தாமே கற்பிக்கின்றார். அழுதபிள்ளை தான் பால்குடிக்கும். ஆராய்ச்சி செய்பவன் தான் வெற்றிகாண்பான். "தெய்வந் தொழா அன் தொழுநன் தொழு தொழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை'' என்ற தெய்வப் புலவரின் வாக்கும் கடமைகளைச் செய்கின்ற போது அது தெய் வத்தாலே ஆகும் என்பதை எம்மை சிந்திக்க வைக்கின்றன.

### பகிர்வதே இன்பம்

பொருள் பண்டங்களைத் தேடிச் சேர்ப்பதை விடுத்து பிறருக்கும் பொல்லாங்கு நினைக்காமல் நாம் போமளவும் பிறருக்கு இட்டு, உண்டு இன்பங்காண வேண்டும். சிதைந்த பெயருடன் நாட்களைக் கழிப்பதை விட இறப்பது மேலானது. பிறருக்கு இடைஞ்சலாக இருப்பவர்களைக் குறித்து இயேசு பகர்வது ''அவனது கழுத்தில் இயந்திரக்கல்லைக் கட்டி அவனைக் கடலிலே அமிழ்த்துவது அவனுக்கும் நலமானது'' என்கிறார். இறைபிரசன்னம் உணரப் படாமையே எல்லாத் தீமைக்கும் காரணமாகும். இன்பங்களை அனுபவித்து அகாலமரணத்தைத் தழுவாமல், இருப்பதை கொடுத்துப் பகிரும் போது இரட்டிப்பான மகிழ்ச்சி உண்டாகின்றது. கொடுப்பவரும் பெறுபவரும் மகிழ்ச்சி அடைகின்றார்கள். எதைக் கொடுப்பது என்று

அன்ரனிபீற்றர்

யோசிக்க வேண்டாம் நிம்மதியைக் கொடுப்பதே பெறமுடியாத பகிர்வாகும்.

### இறைவனுக்கு நன்றி சொல்வோம்

கடந்துபோன கசப்பான உண்மைகள் அனுபவங்களாக வேண்டும். கடவுளின் துணை கொண்டு, நன்மைகள் செய்து கொண்டு, நானிலம் தளைத்து ஓங்க, எங்களின் கடமைகள் உணர்வுள்ளவையாக அமையவேண்டும். எது எப்படித்தான் நடந்தாலும் எம் விசுவாசம் தளர்ச்சியடையக் கூடாது. இயேசு எம்மை மீட்கும் தெய்வமாக இவ்வுலகிற்கு வந்தார். நல்வழிகாட்டினார். பாடுகள் துன்பங்கள் அனுப



பரமபிதா காட்டிய பாதை

வித்தார். வெற்றிவாகை சூடினார். ஒரு தாயவள் தான் பெற்ற மழலையின் முகத்தை முதலில் கண்டவுடனே தான் அனுபவித்த வேதனைகளையெல்லாம் மறந்து மகிழ்வினில் திழைக்கின்றாள். அது போல எமக்கும் "நடக்கவிருக்கும் நல்லதை எதிர்நோக்கிக் காத்திருப்பதிலே பாதி இன்பம் கிடைத்துவிடுகின்றது' என்று லூசி என்ற இறைபக்தன் கூறுகின்றார். என்ன நேர்ந்தாலும் இறைவனுக்கு நன்றி சொல்வோம், எல்லாத் தேவைகளிலும் புகழ்ச்சிகளையும் மன்றாட்டங்களையும் இறைவனுக்குச் சமர்ப்பிப்போம். தக்க தருணத்தில் இறைவன் எமது விண்ணப்பங்களுக்கு பதில் தருவான் என்ற நம்பிக்கையுடன் நாளும் வாழ்வுப் பயணத்தைத் தொடர்வோம்.

## இராசிபலன்

29.07.2007
(ஆடி 13, ஞாயிற்றுக்கிழமை)
சதுர்தசி முற்பகல் 07.45 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 3.10 மணிவரை
இராகுகாலம் 04.33-06.03 மணிவரை
சுபநேரம் 09.03-10.33 மணிவரை
பூரணை விரதம்
யட்டினத்தடிகள் குருபூசை

| | |
|---|---|
| | கடின முயற்சி, அதிகாரம், எடுத்தகாரியம் கைகூடும், போசன சுகம். |
| | புதிய திட்டமிடல், திடீர் பயணம், ஆன்றோர் மதிப்பு, வீண் பயம். |
| | கலகம், [illegible]ாரியதடங்கல், ரோக நிலை, போசன சுகம். |
| | களஸ்திரநன்மை, முயற்சி கைகூடும், கலந்துரையாடல், பாராட்டு. |
| | இஷ்டசித்தி, தேக நலன், போசன சுகம், சத்ருஜெயம். |
| கன்னி | பணக்குறைவு, கௌரவக்குறைவு, முயற்சி தடங்கல், சொத்துப்பிணக்கு. |
| துலாம் | தாய்வழி உறவு, கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், அற்பர் உறவு. |
| விருச்சிகம் | மனோதைரியம், போசன நன்மை, பிரயாண நன்மை, இஷ்டசித்தி. |
| தனுசு | குடும்பக்கவலை, பணவிரயம், முயற்சி தாமதம், ஆரோக்கியக்குறைவு. |
| மகரம் | ஆழ்ந்த சிந்தை, போசன நன்மை, புதிய முயற்சி, வெகுமானம். |
| கும்பம் | காரிய அலைச்சல், உறவினர் மனஸ்தாபம், சயனசுகக்குறைவு, அதிக செலவு. |
| மீனம் | குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும், விருந்துபசாரம், கீர்த்தி. |

வளவன்

# பல அரசாங்க அலுவலகங்களில் தமிழ் மொழி இதுவரை அமுல்படுத்தப்படவில்லை - டியூ.குணசேகர

(கொழும்பு)

13ஆவது திருத்தச்சட்டத்தின் தேசிய மொழி தொடர்பான சட்டமூலம் அமுல்படுத்தப்பட்டால் வடக்கு, கிழக்கில் நிலவி வரும் தேசிய பிரச்சினையின் அரைவாசி முடிவுக்கு வந்துவிடும் என ஸ்ரீலங்காவின் அரசியல் அமைப்பு விவகாரத்துறை அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச்சட்டத்தின்படி சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் தொடர்பான சட்டமூலம் கடந்த 20வருடங்களுக்கு மேலாக அமுல்படுத்தபடாமல் இருப்பதாலேயே மோதல்கள் இந்த அளவுக்கு உக்கிரமடைந்திருப்பதாக அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றியபோது அமைச்சர் கூறினார்.

அலுவலக மொழி சட்டப்பிரிவுக்கு அமைய தேசிய மொழிச்சட்டத்தை அமுல் படுத்தும் அதிகாரம், அலுவலக மொழி தொடர்பான ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், பல அரசாங்க அலுவலகங்களில் தமிழ் மொழி இதுவரை அமுல்படுத்தப்படவில்லை என்றார் டியூ.குணசேகர குறிப்பிட்டார்.

பல அரசாங்க அலுவலகங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது எனச் சுட்டிக்காட்டிய அவர் எந்தவொரு அரசாங்க அலுவலகத்தில் பெயர்ப்பலகையும் மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டிருக்கவேண்டும் என சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகக் கூறினார்.

அரசாங்கத்தின் தகவலின் படி இலங்கையில் உள்ள மாவட்ட செயலகங்களில் 50 வீதம் முதல் 30 வீதம் வரையானவர்கள் தமிழ் பேசக்கூடியவர்களாக இருப்பதாகவும் இதில் முஸ்லிம்களும் உள்ளடங்குவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நான் அரைவாசி மாவட்ட செயலகங்களுக்கு விஜயம் செய்திருந்தேன் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள வறியவர்கள் மாவட்டச் செயலகங்களில் சமர்த்தி விண்ணப்பங்களை நிரப்புவதற்காக அலுவலகத்திற்கு வெளியால் உள்ளவர்களுக்கு 25ரூபாவைச் செலுத்துகின்றனர். ஏனெனில் மாவட்டச்செயலகங்களில் தமிழ் மொழி மூலமான விண்ணப்பப்படிவங்கள் இல்லை.

என அரசியல் அமைப்பு விவகாரத்துறை அமைச்சர் டியூ.குணசேகர அந்தக் கருத்தரங்கில் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்குக்கு அப்பால் 61 வீதத்திற்கும் அதிகமான தமிழர்கள் வசித்துவருவதால் அரசாங்க அலுவலங்களில் தமிழர்களை சேவைக்கு அமர்த்துவது அவசியம் இந்த மாதம் முதலாம் திகதி முதல் அரசாங்க அலுவலகங்களில் புதிதாக இணைத்துக் கொள்ளப்படுபவர்கள் அவர்களுடைய தாய்மொழியைத் தவிர மற்றைய மொழிகளிலும் சிறப்பை வெளிப்படுத்தவேண்டும் என அறிவுறுத்தியுள்ளோம் என்றார் அமைச்சர். (அ-5)

## அஞ்சல் திணைக்கள அடையாள அட்டை

மீசாலை உப தபால் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட ரவீந்திரன் எயூட் என்ற மாணவரது E-P 008697 இலக்க அஞ்சல் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டையின் உரிமையாளர் அலுவலக நேரத்தில் வந்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம். (கு)

# ஐக்கிய தேசியக்கட்சி பொருளாளர் திலக் கருணாரத்ன பதவி விலகியுள்ளார்

குடும்பிமலை ஆக்கிரமிப்பை தொடர்ந்து ஜாதிக ஹெல உறுமயவினரை ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடுமையாக விமர்சித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து திலக் கருணாரத்தின பதவி விலகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேலும் பண்டாரகம மற்றும் பாணந்துறை தொகுதிகளுக்கான அமைப்பாளர்கள் நியமனம் தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி தலைமையுடன் திலக் கருணரத்தினாவுக்கு முரண்பாடு இருந்ததாகவும் அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமயவில் முன்னர் தீவிரமாக பணியாற்றியவர் திலக் கருணரத்தின என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் திலக் கருணரத்தினவின் பதவி விலகலை ரணில் விக்கிரமசிங்க ஏற்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய கருணாரத்தின ஐக்கிய தேசியக்கட்சிக்கு 1993ஆம் ஆண்டு தாவினார். அதன்பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிலிருந்து விலகி சிகல உறுமய என்ற அமைப்பை நிறுவினார். அந்த அமைப்புத் தான் பின்னர் ஜாதிக ஹெல உறுமயவாக தற்போது மாறியுள்ளது.

ஜாதிகஹெல உறுமயவின் செயலாளராக அவர் பதவி வகித்த நிலையில் முரண்பாடுகள் ஏற்பட்டு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்தார். கடந்த நவம்பர் மாதம் ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளராக அவர் நியமிக்கப்பட்டார். (அ-5)

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்த யாழ் விஜயம் நாளை முதல் பொதுமக்களை நேரில்சந்திப்பார்

(கொழும்பு)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ் .மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்த நேற்று யாழ். நகருக்கு வருகை தந்துள்ளார்.

தொடர்ந்து யாழ். நகரில் தங்கியிருக்கும் அமைச்சர் நாளை முதல் பொதுமக்களை நேரில் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள், தொண்டர் ஆசிரியர்கள், அரச நிர்வாகிகள், வன்னியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்கள், அரசதுறை பணியாளர்கள் உட்பட பல்வேறு துறைசார்ந்தவர்களையும் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார் என அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தரப்பினருக்கும் பொதுமக்களுக்குமிடையிலான உறவுகளை மேலும் உறுதிப்படுத்தி பொதுமக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையை வழங்குவதும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் யாழ். விஜயத்தின் இன்னுமொரு நோக்கமாகும் எனவும் மேலும்

யாழ். குடாநாட்டில் தற்போது அதிகரித்து காணப்படுகின்ற பொருட்களுக்கான விலைகளைக் கட்டுப்படுத்தி மக்கள் மீதான சுமையைக் குறைப்பதற்கும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும் எனவும் அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அழிந்து செல்லும் எமது வளங்களை பாதுகாப்பது அனைவரதும் கடமையாகும்

## -உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன்

அழிந்து செல்லும் எமது வளங்களை பாதுகாப்பது அனைவரதும் கடமையாகும் என்று காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் தெரிவித்துள்ளார். காரைநகர் பிரதேச சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் தலைமையேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேச சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுவின் கூட்டம் கடந்த 26ஆம் திகதி காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் காரைநகர் பிரதேச சுற்றுச் சூழல் அதிகாரி உட்பட பொது அமைப்பின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

உதவி அரச அதிபர் தொடர்ந்தும் உரையாற்றும் போது காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு பூகோள ரீதியாக ஒரு வரையறுக்கப்பட்ட ஒரு பிரதேசமாகும். ஆதலால் எமது பிரதேசத்தில் இருந்து வளங்களை வெளியே கொண்டு செல்வதில் ஒரு தெளிவான சட்ட ரீதியான நடைமுறைகளைக் கடைப்பிடிக்க முடியும். இன்றைய சூழலில் பல்வேறுபட்ட இன்னல்கள் இருப்பினும் அதனைக் காரணம் காட்டி எமது சூழலை அழிக்க அனுமதிக்க முடியாது.

வளங்களை பாதுகாப்பது என்பது எமது தனிப்பட்ட விருப்பம் என்பதனை விட அரச சட்டதிட்ட நடைமுறைகளையும் கவனத்திற் கொண்டு செயற்படவேண்டும். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு எமது வளங்களை அழியவிடாது பாதுகாக்க அனைத்துத் தரப்பினரும் பாடுபடவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நிறைவில் அனுமதியின்றி எவரும் காரைநகருக்கு வெளியே விறகு கொண்டுசெல்ல அனுமதிக்க முடியாது.

☞ கொத்துவிறகாக மட்டுமே வாரத்தில் திங்கள், புதன் ஆகிய இரு தினங்களும் மிதிவண்டியில் கொண்டுசெல்ல முடியும்.

☞ பட்ட பனைக்கொட்டுவிறகு மட்டும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று தினங்கள் மட்டும் கொண்டு செல்ல முடியும் எனவும் புதிதாக தீர்மானிக்கப்பட்டது. (அ)

# கொழும்பு விசாகா வித்தியாலயம்

## க.பொ.த. (உயர்தர) இறுதிப் பரீட்சை ①

ஜூலை 2007

**இணைந்த கணிதம்– I** | நேரம் – 3 மணித்தியாலயம்

**இணைந்த கணிதம்– I**

### பகுதி I

01) a) a,b,c , d என்பன மெய் எண்கள் ac=2.(b+d) எனின் $x^2+ax+b=0$, $x^2+cx+d=0$ என்னும் இரு சமன்பாடுகளில் குறைந்தது ஒன்றாவது மெய்மூலங்களைக் கொண்டிருக்கும்.

b) $ax^2+bx+c=0$ இன் மூலங்கள் $\alpha, \beta$ ஆகும் அத்துடன் a>0, $\alpha<(-1)$, $\beta>1$ ஆகும் c<0 எனவும் a+|b|+c<0 எனவும் காட்டுக.

c) $f(x)$, $g(x)$ என்பன x இலான சார்புகள் $f(x)$ ஆனது இனால் $3x^2+5x-2$ இனால் வகுக்கப்படக்கூடியது $g(x)$ ஆனது $(x^2-4)$ ஆல் வகுக்க மீதிகள் முறையே 2x+1 X+5 ஆகும். $f(x)+g(x)$ இன் ஏகப்பரிமான காரணியைக் காண்க. மேலும் $f(x).g(x)$ ஆனது இக் காரணியால் வகுக்க பெறப்படும் மீதி யாது?

02) a) 6 சிறுவர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கவேண்டிய அவசியம் உள்ளது. வந்துள்ள இரு வேறான பாடசாலைகளில் இருந்து முதல் பாடசாலை 4 girls உம் 3 boys ஐயும் கொண்டது மற்ற பாடசாலை 3 girls " 4 " கொண்டுள்ளது. 3 சிறுவர்களை இரண்டு பாடசாலையிலும் கொண்டதாகவும் குழு 3 girls, 3 boys கொண்டதாகவும் அமைய வேண்டிய குழுக்கள் எத்தனை?

b) $\left(ax^2+\frac{1}{bx}\right)^{11}$ இல் $x^7$ இன் குணகமும் $(ab\neq0)$ $\left(ax-\frac{1}{bx^2}\right)^{11}$ இல் $x^{-7}$ இன் குணகமும் சமன் எனின் a,b இடையான தொடர்பு என்ன?

c) $(1+x)^{15}=(c_0+C_1x+c_2x^2+---+C_{15}x^{15}$ எனின் அட்சர கணித முறையைப் பயன்படுத்தி $c_1+2c_2+3c_3+4c_4+---+15c_{15}=15(2^{14})$ எனக் காட்டுக.

03) (a) $y=|3x+1|$ $y=|2-x|+3$ என்பவற்றை ஒரே அச்சில் வரைந்து $|3x+1|-|2-x|<3$ ஐத் திருப்தி செய்யும் x இன் வீச்சு யாது?

b) $n\in Z^+$ $n>1$ எனின் $\frac{1}{n+1}+\frac{1}{n+2}+\frac{1}{n+3}+---+\frac{1}{2n}>\frac{13}{24}$ என கணிதத் தொகுத்தறி மூலம் நிறுவுக.

c) $\frac{3}{1^2}+\frac{5}{1^2+2^2}+\frac{7}{1^2+2^2+3^2}+\frac{9}{1^2+2^2+3^2+4^2}+\cdots$ இல் n உறுப்புக்களின் கூட்டுத்தொகையைத் தருக.

04) 1) b என்பது மெய் எண்ணாக $q=\alpha+i\beta$, $b<qq'$ எனவும் $z\bar{z}-\bar{q}z-q\bar{z}+b=0$ என்பது ஆகன் வரிபடத்தில் வட்டத்தை வரைகிறது எனக் காட்டுக. மையத்தினை குறிக்கும் சிக்கல் எண் யாது.

ii) Z Z' என்பன இரு சிக்கல் எண் ஆகட்டும் |z-z'| =|z+z'| எனின் $\frac{iz}{z'}=k$ எனக் காட்டுக. இங்கு $k\in IR$

iii) சிக்கல் எண் $Z=\cos\theta+i\sin\theta$, $-\frac{\pi}{2}\leq\theta\leq\frac{\pi}{2}$ எனின் $|1+z|=2\cos\frac{\theta}{2}$, $\arg(z+1)=\theta/2$ எனக் காட்டுக. இதிலிருந்து அல்லது வேறு விதமாக $\frac{1}{1+z}=\frac{1}{2}\left\{1-i\tan\left(\frac{\theta}{2}\right)\right\}$ எனக் காட்டுக. $-\frac{\pi}{2}\leq\theta\leq\frac{\pi}{2}$ இடையில $\theta$ மாறும் போது மாறும் போது Z இன் ஒழுக்கையும் $\frac{1}{1+z}$ இனைக்குறிக்கும் சிக்கல் எண்ணின் ஒழுக்கையும் காண்க.

05) i) x>0 ஆக சார்பு $3x+\sin x-8\sin\frac{x}{2}$ நேரானது எனக் காட்டுக.

b) $(a+bx)e^{y/x}=x$ எனின் Y இற்கும் x இல் ஒரு சார்பு தருக. இதிலிருந்து $x^3\frac{d^2y}{dx^2}=\left(x\frac{dy}{dx}-y\right)^2$ எனக்காட்டுக.

c) h உயரமும் r ஆரையுமுடைய உருளையின் மேல் மேற்பரப்பிலும் அடி மேற்பரப்பிலும் r(வரை)ஆரையுடைய அரை வட்டப்பகுதி தோண்டப்படுகிறது. மீதியின் கனவளவு V மேற்பரப்பின் பரப்பு S இழிவு ஆகுமாறு $\frac{r}{h}$ இன் பெறுமானம் யாது? S இன் இழிவுப் பெறுமானத்தை V இன் சார்பில் தருக.

(06) a) a மாறிலியாக $\int_0^a f(a-x)dx=\int_0^a f(x)dx$ என நிறுவுக.

b) a $\int_0^{\pi/2}\frac{dx}{1+\tan^3x}$ ஐ மதிப்பிடுக.

$\int_{\pi/6}^{\pi/2}\cos 2x\ln|\sin x|\,dx$ b) $\int\frac{5\,dx}{(x+1)(x^2+4)}$

(07) $(x_0,y_0)$ இலிருந்து $ax+by+c=0$ வரையப்பட்ட செங்குத்து உயரத்தைக் காண்க. A(−2a,0) B(2a,0) எனும் இரு புள்ளிகளுக்கிடையே மாறும் கோடு ஒன்று செல்கிறது. இக் கோட்டு இரு புள்ளிகளிலும் இருந்து அதன் தூரம் ஆனது $a^2$ க்கு சமமானதாக இருக்க கோடு மாறுகிறது. எனின் அப்புள்ளிகளில் ஏதாவது ஒன்றில் இருந்து கோட்டுக்கு வரையப்படும் செங்குத்துகளின் அடியானது $x^2+y^2=3a^2$ எனும் வட்டத்தில் அசைகிறது எனக் காட்டுக.

(08) $S_1\equiv x^2+y^2+2g_1x+2f_1y+c_1=0$

$S_2\equiv x^2+y^2+2g_2x+2f_2y+c_2=0$

ஒன்றையொன்று தொடுவதற்கான நிபந்தனையைப் பெறுக. ஏன்பன ஒன்றையென்று தொடுமா? காரணம் தருக. $S_1=0$ இன் மையமூடும் செல்வதும் $S_1=0$ தொடும் சிறிய வட்டத்தின் சமன்பாட்டைத்தருக. இவ்வட்டமும் $S_1=0$ உம் வெட்டும் புள்ளியின் ஆள்கூறறைத் தருக.

(09) i, a) $2\cos\theta+3\sin\theta=0$ இன் பொதுத் தரவு யாது?

b) $\cos\frac{\pi}{7}.\cos\frac{4\pi}{7}.\cos\frac{5\pi}{7}=\frac{1}{8}$ எனக் காட்டுக.

ii) $\triangle ABC$ யிற்கான Cosine விதியைக் கூறுக. $(a+b)^2=c^2+ab$, $\sqrt{2}(\sin A+\cos A)=\sqrt{3}$ எனத்தரப்படின் $\triangle$ இன் 3கோணங்களையும் காண்க.

# இலங்கையில் தமிழர் தாயகப் பிரதேசம் இல்லையென்ற ஜாதிக ஹெல உறுமயவின் கோட்பாடுகள் தவறானவை

## -பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி

இலங்கையில் தமிழ் மக்களின் தாயகப் பிரதேசம் இல்லை என்றும் தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை கிடையாது என்றும் ஜாதிக ஹெல உறுமய முன்வைத்துள்ள கோட்பாடுகள் தவறானவை என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய அனைத்து கட்சி பிரதிநிதிகள் சபைக்கு வழங்கிய யோசனைகள் குறித்த கருத்தரங்கில் உரையாற்றும்போதே பேராசிரியர் தாயசிறி இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவினர் தமிழ் மக்களின் தாயகப் பிரதேசம் குறித்தும் சுயநிர்ணய உரிமை குறித்தும் தெரிவித்துள்ள கருத்துக்கள் தவறானவை என்பதை வரலாற்று ஆதாரங்களுடன் நிரூபிக்க தயாராக இருப்பதாகவும், இந்த விடயம் குறித்து ஹெல உறுமயவினர் தன்னுடன் பகிரங்க விவாதத்திற்கு வரவேண்டும் என்றும் அவர் அறைகூவல் விடுத்துள்ளார்.

ஒரு நாட்டிற்கு மத அல்லது இன அடையாளம் வழங்கப்படுமானால் அந்த நாட்டில் வாழும் ஏனைய இன மத மக்கள் அந்த நாட்டின் குடிமக்கள் அல்ல என்ற நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்றும் அவ்வாறான நிலையினை இலங்கையில் ஏற்படுத்தவே ஜாதிக ஹெல உறுமய முயற்சிப்பதாகவும் கருத்தரங்கில் கலந்து கொண்ட சட்டத்தரணியான சிரால் லக்திலக குறிப்பிட்டுள்ளார். ஜாதிக ஹெல உறுமயவின் தீர்வு யோசனைகள் முற்றிலும் யுத்த வெறியூட்டப்பட்ட ஒன்றாகவே தென்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்ட போரதனை பல்கலைக்கழக பேராசிரியரான சரித ஹேரத் தான் ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைகளை பின்பற்றுகின்ற போதிலும் இனப் பிரச்சினை குறித்து அவர்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறினார்.

தமிழ் மக்கள் தமது தாயக பூமியை அடைவதற்காக தங்களையே வெடிகுண்டுகளாக்கி போராடி வரும் நிலையில் அவர்களுக்கு தாயகப் பிரதேசம் என்பதே இல்லை என்ற வாதம் அடிப்படையற்றது என்று அவர் தெரிவித்துள்ளார். இந்தக் கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஜாதிக ஹெல உறுமயவின் அரசில் உயர் பீடத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாக கருத்தரங்கில் கலந்து கொண்ட ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகர் உதய கம்மனபில உறுதியளித்துள்ளார். (அ)

# இன்று ஒரு தகவல்

## ஆதவனைப் பார்த்தால் ஆபத்து!

என்னுடைய நண்பர் ஒருவர்... தினமும் தவறாமல் சூரிய நமஸ்காரம் செய்பவர். அதிகாலையிலே எழுந்திருப்பார். ஆற்றுக்குப் போவார். குளிப்பார். சூரியன் உதயமாகும். அதைப் பார்த்துக் கும்பிடுவார். அதன்பின் தான் அவர் மற்ற வேலைகளை ஆரம்பிப்பார்.

சூரியன் உதிப்பதற்கு முன்னரே எழுந்து குளிர்ந்த நீரிலே குளிப்பது... மருத்துவ ரீதியாகவே உடம்புக்கும் மனதுக்கும் நல்லது.

இருந்தாலும் சூரிய நமஸ்காரம் செய்யக் கூடாத ஒரு நேரமும் உண்டு. அது எது தெரியுமா? சூரிய கிரகணம் உண்டாகும் நேரம். சூரிய கிரகண நேரத்திலே சூரியனை உற்றுப் பார்ப்பது மிகவும் ஆபத்தான விஷயம். அது பார்வையையே பாதித்துவிடும்.

சாதாரணமாகவே சூரியனை நமது கண்களால் உற்றுப் பார்க்கமுடியாது... அளவுக்கு அதிகமான பிரகாசம்... அதனாலே பார்ப்பது கஷ்டம்.

கிரகண நேரத்தில் என்ன நடக்கிறது என்றால் நிலவு குறுக்கே வந்து விடுகிறது... சூரியனைப் பார்ப்பது சுலபம். இருந்தாலும் அப்படி பார்க்க ஆசைப்படக்கூடாது. பார்க்கவும் கூடாது. அது பார்வையைக் கெடுத்துவிடும்.

ஆபத்து என்று தெரிந்தும் கூட அதைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுபவர்களும் உண்டு. முக்கியமாக குழந்தைகள் அந்தச் சமயத்திலே சூரியனைப் பார்க்க ஆசைப்படும். அது தப்பு என்று பெரியவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

குழந்தைகளிடம் அப்படி சொல்லிவிட்டு இவர்கள் மட்டும் தனியாக ஓடிப்போய் கொல்லைப் பக்கம் நின்று சூரியனைப் பார்க்கக் கூடாது.

கிரகண சமயத்திலே சூரியனை நிலவு மறைத்தால் கூட – வெளிச்சம் தடுக்கப்பட்டால் கூட– Ultra violet Rays –புற ஊதாக் கதிர் –அது பாட்டுக்கு வந்து கொண்டேயிருக்கும். நமக்குத் தெரியாமலே நமது கண்ணுக்குள்ளே புகுந்து விடும். புற ஊதாக் கதிரின் Photo Chemical effect இனால் விழித்திரை பாதிக்கப்படும்.

சிலபேர் கிரகணசமயத்திலே சூரியனைப் பார்த்துவிட்டு... எனக்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பார்கள். என்ன நடந்திருக்கிறது என்று அவர்களுக்கே தெரியாது.

ஏதாவது ஒரு வேலை கிடைத்து மருத்துவ பரிசோதனைக்குப் போவார்கள். அப்பொழுது டாக்டர் சொல்லுவார்... "உங்கள் பார்வையிலே கோளாறு இருக்கிறது" என்று.

கிடைக்கவிருந்த வேலையும் கிடைக்காமல் போய்விடும்! சில நுணுக்கமான வேலைகளிலே ஈடுபடுகிற பொழுது... நம்மால் துல்லியமாகப் பார்க்கமுடியாமல் போய்விடும்!

உதாரணமாக, 'மைக்ரஸ் கோப்' மூலமாகப் பார்க்கும் பொழுது தடுமாறுவார்கள்...! சிலபேர் சொல்வார்கள்... கிரகணத்தை நேரடியாகத் தானே பார்க்கக்கூடாது... புகைக் கண்ணாடி மூலமாகப் பார்க்கிறேன்... பாத்திரத்தில் தண்ணீர் வைத்து அதனுடைய பிரதிபலிப்பைப் பார்க்கிறேன்...!

இப்படியெல்லாம் சொல்வார்கள். ஆனால் நிபுணர்கள் அப்படியெல்லாம் பார்ப்பது தப்பு என்கிறார்கள். 'கூலிங் கிளாஸ்' போட்டுக் கொண்டு பார்த்தாலும் அது சூரியனின் பிரகாசத்தைத் தான் குறைக்குமே தவிர புற ஊதாக் கதிர் நுழைவதைத் தடுக்காது என்கிறார்கள்.

மிகவும் சுலபமாகப் பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள் யார் தெரியுமா? குழந்தைகள்; உயரமான இடத்திலே– அதாவது மலைப்பகுதிகளிலே– இருப்பவர்கள் ஏற்கனவே கண் அறுவைச் சிகிச்சை– Cataract ஆப்பரேஷன் பண்ணிக் கொண்டவர்கள்.

இவர்களெல்லாம் கவனமாக இருக்கவேண்டும். ஓர் அம்மா... அவர் வீட்டுக்காரரை அழைத்துக் கொண்டு அவசர அவசரமாக மனோதத்துவ டாக்டரிடம் வந்தார்.

"டாக்டர் ... எங்க வீட்டுக்காரர் திடீரென்று எழுந்திருந்து... கொஞ்சநேரம் நான் வானத்திலே உள்ள முழு நிலாவைப் பார்த்துவிட்டு வருகிறேன்... என்னைத் தொந்தரவு பண்ணாதே என்று சொல்லிவிட்டு வெளியே போனார்...

பத்து நிமிஷம் வானத்தை உற்றுப் பார்த்தார் நிலா ரொம்ப அழகாக இருக்கிறது என்று சொல்கிறார் டாக்டர்" என்றார்.

"அதிலே என்ன தப்பு?" என்று கேட்டார் டாக்டர்.

"நேற்றைக்கு அமாவாசை ஆச்சே டாக்டர்" என்றார் அந்த அம்மா!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அமைதி உணரப்பட வேண்டிய அற்புதமான சக்தி



அமைதியை அடைவதற்கு எங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை ஆராய்வதைவிட, உள்ளத்தை நோக்கி எமது கவனத்தைத் திருப்புவதன் மூலம் அமைதியை அடையலாம் என்ற செய்தியை மகாராஜி என அழைக்கப்படும் பிறேம் ராவத் அவர்கள் உலகம் முழுவதும் வழங்கி வருகின்றார்.

இந்திய உபகண்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மனம் கவர்ந்தது மட்டுமன்றி இலண்டன் அல்பேட் மண்டபம், நியூயோர்க் இலிங்கன் மத்திய நிலையம், சிட்னி ஒப்ரா இல்லம், பாங்கொக் நகரம், ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டு மண்டபம் போன்ற உலகப் பிரசித்தி பெற்ற மண்டபங்களில் உரையாற்றிவரும் பிறேம் ராவத் அவர்கள் சமூக, கலாசார, அரசியல் எல்லைகளையும் தாண்டி மக்களுக்கு இந்த செய்தியை வழங்கி வருகின்றார்.

தனது 13ஆவது வயதில் உலகத்துக்கு இச் செய்தியை வழங்கத் தொடங்கி பிறேம் ராவத் அவர்கள் இன்று வரை 50ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பயணம் செய்து 65 இலட்சத்துக்கும் மேற்பட்ட சபையோர் முன் உரையாற்றிவிட்டார். இவருடைய செய்தி இன்று பிறேம் ராவத் அறக்கட்டளை நிலையத்தினூடாக 85 நாடுகளுக்கு வழங்கப் பட்டு வருகிறது.

உலகில் அநேகர் அமைதி பற்றிப் பேசி வருகின்ற போதிலும் பிறேம் ராவத் அவர்களுடைய செய்தி மிக எளிமையானதும் வித்தியாசமானதுமாகும். ஏனெனில் அவர் குறிப்பிடும் அமைதி எம்முடன் தொடர்புபட்டுள்ளது. அமைதி பற்றிக் குறிப்பிடும் பிறேம் ராவத் அவர்கள் "உள்ளத்தின் அமைதியை வார்த்தைகளுக்குள் அடக்கிவிட முடியாது. அமைதி என்பது ஒரு உணர்ச்சி. எமக்கு கொடுக்கப்பட்ட கொடை. இது ஒரு அற்புதமான சக்தி. அமைதி உணரப்பட வேண்டிய ஒருவிடயம். இந்த அமைதி எம் உள்ளத்துள் வாசம் செய்கின்றது. சாந்தம், அமைதி, பேரானந்தம் போன்ற விடயங்களை நாம் பற்றிக்கொள்ளும் போது, நாம் இவற்றை அனுபவம் மூலம் உணர்வதால் நாம் மேலும் அழகு பெறுகின்றோம். நாம் சுவாசிக்கும் ஒவ்வொரு மூச்சையும் விரயம் செய்யாமல் அனுபவிக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதால் நன்றிறவைப் பெறுகின்றோம்" எனக் குறிப்பிடுகின்றார்

உண்மையான ஆர்வம் உள்ளவர்களுக்கு அவர் உதவி வழங்கி வருகின்றார் "உங்களுக்குள்ளே இருக்கும் அந்த அமைதி, ஆனந்தம் உள்ள ஒரு இடத்தை என்னால் காட்டித் தரமுடியும். நீங்கள் ஆனந்தத்தை தேடிக் கொண்டிருந்தால் ஆனந்தம் எங்கே இருக்கிறது என்று என்னால் உங்களுக்கு காட்டித்தர முடியும். அது உங்களுள்ளே தான். அந்த தொடர்பினை ஏற்படுத்தி வாழ்வில் ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்"

மகாராஜி வழங்கும் இச்செய்தி பற்றிய ஒரு இலவச வீடியோ நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10.00மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.குடாநாட்டில் மேலதிக தகவல்களுக்கு தொலைபேசி எண்:222 3705

இணையத்தளங்கள்: WWW.Withinu.org, WWW.maharaji.net

மகராஜி

# வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம் இறுதிப் போட்டி

யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம்



V. குமணன் (அணித் தலைவர்), V.காண்டீபன், S.ரதீஸ்குமார், W.றஜீவன் ரட்ணம், M. மயூரன், T.கிருஷாந் P.நேசவர்மன், M.கரிபிரவீன், T.நிரூபன், V.ராகுலன், V.பிரணவன், A.விதூசன், R.கஜீபன்.

யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம்



சி.உமாகரன், ந.சுதாகரன், A.பிரியதர்ஷன், K.நாதன், S.ஜனகன், ந.சிவராஜா, S.சைலேஸ்வரன் V.மணிவண்ணன், B.ஜெயரூபன், S.லக்ஸ்மிகாந்த் (அணித் தலைவர்), V.அருண்குமார்.

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நான்காவது முறையாக நடாத்தி வரும் வீ.டி.ஜெயரட்ண சிங்கம் கிண்ணத்துக்கான இக் கிரிக்கெட் போட்டியில் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்கு சிறிலங்கா கிரிக்கெட் தேசிய அபிவிருத்தி மையத்தின் வடகிழக்கு மாகாணத்தின் இணைப்பாளரும் கடந்த கால யாழ். மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுநருமாகிய வீ.கே.சண்முகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

இவ் இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் யாழ்.ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதுகின்றன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி முதல் சுற்றில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணியையும், கால் இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை ஓலட் கோல்ஸ் விளையாட்டுக்கழக அணியையும், அரை இறுதிப் போட்டியில் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழக அணியையும் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது. யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி முதல் சுற்றில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியையும், கால் இறுதிப் போட்டியில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியையும், அரை இறுதிப் போட்டியில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணியையும் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது. இதில் வெற்றிபெறும் அணிக்கு ஜெயரட்ண சிங்கம் வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசிலும், இரண்டாம் இடத்தை பெறும் அணிக்கு ஜெயாகனகநாயகம் வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசிலும் இச் சுற்றுப் போட்டியில் தொடர் நாயகனுக்காக S.D. சிவமித்திரன் வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசிலும், இறுதிப் போட்டியின் நாயகனுக்கு S.மணிவதனன் வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசிலும் வழங்கப்படும். இப்போட்டிக்கு யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் மத்தியஸ்தர் குழுவைச் சேர்ந்த S.கோகுலனும், K.செல்வராசாவும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றுவார்கள்.

## இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேலுக்கு சுவாமி சித்ரூபானந்தா வாழ்த்துச் செய்தி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் மாண்புமிகு இந்திய ஜனாதிபதி திருமதி.பிரதீபா பட்டேலுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம நிர்வாகிகள் சார்பில், தாங்கள் இந்திய குடியரசின் நாட்டின் அதியுயர்ந்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டமைக்கு எங்கள் நல் வாழ்த்துக்கள்.

எங்கள் ஸ்தாபனம் 31.12.69தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 117ஆவது பிறந்த தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டது.

தூய அன்னை சாரதை "பெண்களின் முன்னேற்றம் ஒரு நாட்டின் முதுகொலும்பு" என்று அன்றே கூறியிருந்தார்.

அன்னையின் கனவு நனவாகியது. இந்திய உயர்ஸ்தானிகர் பலரின் உதவியை சேவாச்சிரமம் பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தங்கள் பதவிக்காலத்திலும் எங்கள் சேவாச்சிரமப் பணிக்கு தங்களால் இயன்ற ஆதரவு தரும்படி வேண்டுகின்றோம் என அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## இந்து சமய அறிவுப் போட்டி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்துள்ள அறநெறிப் பாடசாலை மாணவர், மாணவிகளுக்கிடையே ஒக்டோபர் 6ஆம் திகதி சனிக்கிழமை இந்துசமய அறிவுப்போட்டி ஒன்றை நடாத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இதற்கான போட்டி விதிமுறைகள், பாடப்பரப்பு, விண்ணப்பப்படிவம் என்பன அனைத்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்போட்டி கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு எனும் மூன்று பிரிவுகளில் மாவட்டங்கள்தோறும் நடைபெறும். தேசியமட்டம், மாவட்ட மட்டங்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். போட்டியில் பங்குபற்றி 40 புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஆதலால் இதுவரை விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெறாதவர்களும், அனுப்பி வைக்காதவர்களும் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பித்து மாணவர்களை போட்டியில் பங்குபற்ற ஊக்குவிக்குமாறு திணைக்களம் வேண்டிக்கொள்கின்றது. (அ)

மனிதனிடம் அறிவு உறங்கினால் பதவி ஆசைகள் கண்விழித்தெழுந்து குதியாட்டம் போடும்.

-பிளேட்டோ

வலம்புரி

## அரசின் நடவடிக்கைகள் எல்லாம் எதிர்க்கட்சிகளை சமாளிப்பதே

இலங்கை இனப்பிரச்சினை நீடிப்பதற்கு பொறுப்பற்ற அரசுகளே காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

நாடு, மக்கள் என்பதற்கு மேலாக 'பதவி' என்ற மோகமே இலங்கை அரசியல் வரலாற்றில் மேலோங்கிக் காணப்பட்டது. உலகின் ஏனைய நாடுகளை நோக்கும் போது அங்கு அரசு, பாராளுமன்றம், சட்டம், நீதித்துறை என்பன மக்களைப் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டன.

ஆனால் இலங்கையில் இருக்கக் கூடிய அரசியலமைப்புக்கள், சட்டவாக்கங்கள், தேர்தல் நடைமுறைகள் என்பன பெரும்பான்மையினத்தைப் பாதுகாப்பதையும், சிறுபான்மை மக்கள் மேழெல முடியாமல் தடுப்பதையும் இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இலங்கையின் அரசியலுக்கும் ஏனைய நாடுகளின் அரசியலுக்குமிடையே நிறைந்த வேறுபாடுகளை அவதானிக்க முடியும்.

உதாரணமாக உலகில் ஏதேனும் ஒரு நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றபோது குற்றச்சாட்டு நிரூபிப்பதற்கு முன்னதாகவே அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் தாமாகவே முன்வந்து பதவியை இராஜினாமா செய்து விடுவார்.

தம்மீது இம்மியேனும் குற்றஞ்சுமத்தப்படுமாயின் பதவியைத் தூக்கி எறியும் பண்பு அந்நாடுகளில் தாராளமாகக் காணப்படுகின்றது.

இதன் காரணமாக அந்நாடுகளில் அரசியல் பிரமுகர் ஒருவர் மீது குற்றஞ்சுமத்துவது என்பது தீர விசாரித்த பின்னரே முன்வைக்கப்படும்.

ஆனால் இலங்கையில் எவ்வளவுதான் ஆதாரபூர்வமான முறையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தாலும் பதவி விலகல் என்ற பேச்சுக்கே இடமிருக்க மாட்டாது.

குற்றச்சாட்டு, பதவி விலகல் என்பதுதான் இல்லையென்றால், சிலர் தேர்தலில் தோற்றாலும் கூட பதவி விலக மறுத்துவிடுகின்றனர். டி.பி.விஜயதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது தேர்தலில் தோற்றுவிட்டார். சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார்.

எனினும் டி.பி.விஜயதுங்கவை ஜனாதிபதி மாளிகையிலிருந்து அனுப்பி வைப்பதற்குப் போதுமென்றாயிற்று. ஓய்வூதியம், குடியிருப்புக்காக வீடு என அவிப்பாகங்கள் கொடுத்தே அவரை ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேற்ற முடிந்தது.

அப்படியானால் இலங்கை அரசியல் - அரசியல்வாதிகளின் சிறப்பாண்மை எவ்வாறு உள்ளதுஎன்பதை ஊகித்துக் கொள்ள முடியும்.

- இத்தகையதோர் துர்ப்பாக்கிய நிலையே இனப்பிரச்சினை விடயத்திலும் அரசுகளினால் பின்பற்றப்படுகின்றது. அவ்வகையில் இப்போதெல்லாம் ஜனாதிபதிக்கும் அரசுக்குமான பிரச்சினை எதிர்க்கட்சிகளைச் சமாளித்து அவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணிகளை முறியடித்துப் பதவியைத் தக்க வைப்பதாகும்.

இதில் மக்கள் எப்பாடுபட்டாலும், நாடு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. நாம்உயிர் வாழும் காலத்தில் பதவியிலிருந்தால் போதும் என்ற நினைப்பே காணப்படுகின்றது.

இதனாலேயே இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண முடியாத அவல நிலை காணப்படுகின்றது.

# சட்டம், ஒழுங்கு இலங்கையில் பாரியளவில் சீர்குலைந்து விட்டது

## வாஷிங்டன் போஸ்ட் ஒரு சாடல்

(வாஷிங்டன்)

இலங்கையில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துபோய்விட்டது என்று அமெரிக்காவின் வாஷிங்டன் போஸ்ட் சாடியுள்ளது. இலங்கை நிலைமைகள் தொடர்பாக வாஷிங்டன் போஸ்ட் இதழில் எழுதப்பட்டுள்ள கட்டுரையின் தமிழ் வடிவம் வருமாறு,

இலங்கையின் தலைநகர் கொழும்பில் கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதி ஒரு கடைக்குச் சென்ற சிலர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து வந்துள்ள பொலிஸ் அதிகாரிகள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டனர். இலங்கை தமிழ் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த கடையின் உரிமையாளரை விசாரணைக்காகப் பொலிஸ் நிலையத்திற்குத் தம்மோடு வருமாறு கூறி ஒரு வானில் ஏற்றினர். ஆனால் அவர் கடத்தப்பட்டுவிட்டார்.

ஐந்து இலட்சம் டொலர் கப்பம் பணம் கோரப்படுகின்றது. அச்சுறுத்தல்களும் பேச்சுக்களும் இரண்டு மாதங்கள் நீடிக்கின்றன. 20 ஆயிரம் டொலர் பணம் தராவிட்டால் அந்த உரிமையாளரின் மகனையும் கடத்துவதாக எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது. பிறகுதான் பொலிஸ் நிலையத்தில் கடத்தப்பட்டவரின் மகள் முறைப்பாடு செய்தார்.

ஆனால் புதிய அச்சுறுத்தல்கள் அவருக்கு விடுக்கப்பட்டன. ஆனாலும் அதிகாரிகள் எதுவித வெளிப்படையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இலங்கையில் நடைபெறும் கடத்தலில் இது ஒரு நிகழ்வு. நீதிக்குப் புறம்பான படுகொலைகள், காணாமல் போதல்கள், கடத்தல் என்பன கடந்த ஆண்டு முழுவதும் இலங்கையில் நிகழ்ந்து சட்டத்தின் ஆட்சி நொருங்குவதற்கு உள்நாட்டு யுத்தம் அதிகரித்துள்ளது.

தனிநாடு கோரும் தமிழினப் போராளிகளுடன் பெரும்பான்மை சிங்கள அரசாங்கம் போட்டிக் கொண்டிருக்கின்றது. கடத்தப்பட்ட மற்றையவர்களைப் போலத்தான் கடையுரிமையாளரின் குடும்பத்தினரது பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை. கடத்திச் சென்றோர் உண்மையான பொலிஸ் அதிகாரிகளா? அல்லது போலிகளா? என்பது அந்தக் குடும்பத்தினருக்குத் தெரியவில்லை.

ஆனால் எந்தவொரு விளக்கமும் தற்போதைய சூழ்நிலையில் உண்மையாகத் தோன்றும் போலியாகவிருக்கும். 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தமானது பிரதானமாக காகிதத்தில் உள்ளபோதும் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. 1983 ஆம் ஆண்டிலிருந்து இரு தரப்பினருமே தாக்குதல்களில் ஈடுபட்டு வருவதாக அனைத்துலகப் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

போராளிகளின் இராணுவமானது தொடர்ச்சியாக அரச இராணுவம் மற்றும் சிங்களப் பொதுமக்கள் மீதும் திட்டமிட்ட வகையில் ஆத்திரமூட்டக் கூடிய தாக்குதல்களை மேற்கொள்வதாகவும் பலவந்தமாக இளைஞர்களையும் சிறார்களையும் படையணிகளில் சேர்ப்பதாக பிரஸ்செல்லை தலைமையிடமாகக் கொண்டியங்கும் அனைத்துலக நெருக்கடி நிலைக் குழு எனும் அமைப்பின் அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் நீதிக்குப் புறம்பான படுகொலைகள், காணாமல் போகச் செய்தல் ஆகியவற்றை இலங்கை அரசாங்கம் பயன்படுத்துவதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது. கொழும்பிலும் இராணுவத்தின் இறுக்கமான பாதுகாப்பு நிறைந்த பிரச்சினைக்குரிய வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் பொதுவாக கடத்தல்கள், காணாமல் போதல் உள்ளிட்டவைகளில் அரசாங்கத்தின் மீது மனித உரிமை அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

கடத்தல்கள் தொடர்பாக அரசாங்கத்தின் தொடக்க நிலை பதில்கள் வேறானதாகவிருந்தது. பிரதான அரசியல் கட்சிகள் இதனை அரசியல் இலாபங்களுக்காக மிகைப்படுத்துகின்றன. வர்த்தகர்கள் வெளிநாடுகளுக்கு இரகசியமாகச் செல்கின்றனர். தங்களது மனைவிகளை விட்டு வெளியேறி விரும்பியவாறு இரகசியமான இடத்தில் உல்லாசமாக இருந்து விட்டு வருகின்றனர் என்றும் ஒரு அரசியல்வாதி கூறினார்.

ஆனால் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், அதிகாரிகளின் தூண்டுதலில் இக் கடத்தல்கள் சம்பவங்களில் ஈடுபடுவோரின் பெயரைக் குறிப்பிட்டுக் கூறினார். அதனைத் தொடர்ந்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன்னாள் மற்றும் இன்னாள் இராணுவத்தினர், பொலிஸாரை கைது செய்து விசாரணைகளை நடத்தியது.

அரசாங்கப் பேச்சாளர் ஹெறகலிய ரம்புக்வெல நேர் காணல் ஒன்றில், கடத்தல்களும் கப்பங்களும் இலங்கைக்கு புதிது அல்ல. 1980 களில் தென்னிலங்கை வன்முறைகளின் போதும் இருந்தன என்று கூறினார். மேலும் அரசாங்கமும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்த விடயத்தை பாரதூரமானதாகக் கருதி ஜூன் 18 ஆம் திகதி நடவடிக்கை மேற்கொண்டனர் என்று ஜூலை 10 ஆம் திகதி நேர்காணலில் ஹெறகலிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒரேயொரு கடத்தல் சம்பவத்தில் மட்டுந்தான் அதிகாரிகள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர் என்றும் அவர்கூறினார். ஆனால் பல கடத்தல் சம்பவங்களில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வதற்கு அச்சப்படுவதாகப் பாதிக்கப்பட்டோர் தெரிவித்துள்ளனர். 133 கடத்தல் சம்பவங்கள் மற்றும் அதனை அரசாங்கம் கையாண்ட விதம் குறித்த ஆவணத்தை மக்கள் கண்காணிப்பு ஆணையத்தின் மனோ கணேசன் வெளியிட்டுள்ளார்.

உண்மையான குற்றவாளிகள் - பெரிய மீன்கள் - அவர்கள் தண்டிக்கப்படவில்லை என்கிறார் மனோ கணேசன். மகிந்த அரசாங்கமானது மனித உரிமை நிலைகளைக் கண்காணிக்கக் குழுக்களையும் ஆணையங்களையும் அமைக்கின்றது. ஆனால் எதுவித கள நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

தொடர்ச்சியான வலியுறுத்தல்களின் பின்னர் 16 மிக முக்கியமான சம்பவங்கள் தொடர்பில் விசாரணை ஆணையத்தை அரசாங்கம் அமைத்துள்ளது. அக்ஷன் பாம் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் 17 பணியாளர்கள் படுகொலைசெய்யப்பட்ட சம்பவத்தை முதல் வழக்காக அது எடுத்துள்ளது.

ஆனால் சம்பவங்கள் தொடர்கின்றன. அண்மையில் கொழும்பில் தற்காலிகமாகத் தங்கியிருந்த தமிழர்களால் பாதுகாப்புக்கு ஆபத்து என்று கூறி அரசாங்கத்தினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட சம்பவம் சர்ச்சைக்குள்ளானது. பின்னர் நீதிமன்றமானது அதனை நிறுத்த உத்தரவிட்டது. வஜிர தர்மசேன என்ற சிங்களத் தாதி ஒருவர் வவுனியா பிரதான மருத்துவமனையில் பணியாற்றுகின்றார். வடக்கில் பெரும்பான்மைத் தமிழர்கள் வசிக்கும் நகரம் அது. வவுனியாவிலுள்ள சிங்களக் குடியேற்றப் பகுதியான மாமடுவவில் அவர் வசித்து வருகின்றார். போராளிகளாகிய தமிழ்ப் புலிகளால் தாங்கள் தாக்கப்படக் கூடும் என்கின்ற அச்சம் இருப்பதாக அவர் கூறினார். சிங்களத் தாதி மேலும் தெரிவித்ததாவது,

வவுனியாவுக்கும் எமது கிராமத்துக்கும் இடையேயான பேருந்தில் பயணிப்பதை நாம் தவிர்க்க முயற்சிக்கின்றோம். ஏனெனில் அந்தப் பேருந்து இலக்கு வைக்கப்படக் கூடும் என்பதால்தான். நாங்கள் அச்சத்துடன் வாழ்கின்றோம். முன்னரங்க நிலைகளை ஒட்டி வாழும் மக்கள் இரவு நேரங்களில் நகரப் பகுதிக்கு வந்து விடுகின்றனர். பாடசாலை மாணவர்களால் படிக்க இயலவில்லை என்றும் அந்தச் சிங்களத் தாதி தெரிவித்தார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலிருந்து 11 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகக் கடந்த மாதத்தின் இறுதியில் அனைத்துலக ஊடகக் கண்காணிப்புக் குழு வெளியிட்டஅறிக்கை தெரிவிக்கின்றது. ஊடகவியலாளர்களின் மீதான தாக்குதல்களும் படுகொலைகளும் இன்னமும் தீர்க்கப்படவில்லை.

ஊடக சுதந்திரம் அச்சுறுத்தலுக் குள்ளாகியிருக்கின்றது. ஊடகவியலாளர்கள் மீது திட்டமிட்ட வன்முறைகள், அச்சுறுத்தல்கள், கடத்தல்கள், தாக்குதல்கள் நிகழ்த்தப்படுகின்றன என்று அனைத்துலக ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பின் ஜாக்குய் பர்க் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிலைமை சீராகும் வரை அந்நாட்டுக்குரிய உதவிகளை நிறுத்தியும் இடைநிறுத்தியும் சில நாடுகள் வைத்துள்ளன. யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து இலங்கையும் அமெரிக்காவின் நிதியுதவிக்குரிய நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் கொழும்பிலுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவா றொபேட் ஓ பிளேக் அண்மையில் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில்,

யுத்த நிறுத்த ஒப்பந்தம் சீர்குலைந்துள்ள நிலையில் எதிர்பாராத விதமாக இலங்கைக்கான உதவி செய்வதை பரிசீலிக்க வேண்டியுள்ளது. அமைதி முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதி புரிந்து கொள்வார் என்று மிகவும் நம்பிக்கையாக உள்ளோம் என்றார்.

நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலான போதுமான ஆவணங்கள் இருந்தும் வழக்குகளில் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தமிழ் மக்களின் உரிமைகள் மீறப்படுவது தொடர்பான அரசாங்கத்தின் மீதான விமர்சனம் குறித்து அரசாங்கப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல கூறுகையில்,

எல்லாமும் சரியாகத்தான் இருப்பதாகக் கூறமுடியாது. ஆனால் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மேற்கு மாகாணத்தில் 39 வீத தமிழர்கள் இப்போது வாழ்ந்து வருகின்றனர் என்றார் அவர் என வாஷிங்டன் போஸ்ட் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# காணி உறுதிகளுக்குப் பதிலாக புதிய பத்திரம் அறிமுகமாகும்

காணி உறுதிக்குப் பதிலாக புதிய உறுதிப் பத்திரம் ஒன்று அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக இலங் கையிலுள்ள அனைத்துக் காணிகளும் மீண்டும் மதிப்பீடு செய்யப்படவுள்ளன. இதன் பின்னர் காணி உரிமையாளரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், காணியின் அளவு, காணியின் திட்டவரைபு போன்ற விடயங்களிற்கமைய அனைத்துக் காணிகளுக்கும் இலக்கம் குறிப்பிட் உறுதிப்பத்திரம் ஒன்று வழங்கப்படவுள்ளது.

காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திணைக்களத்தின் ஆணையாளர் பி.ஏ.முத்துக்குமாரன கருத்துத் தெரிவிக்கையில், காணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் இப்புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படவிருப்பதாகக் குறிப்பிட்டார். காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறது. (ந-5)

## ஆறு கடற்...

படகுகள் அங்கு சென்றபோது இரண்டு அதிவேகப் படகுகள் அங்கிருந்து வேகமெடுத்தன. அவற்றைத் துரத்திச் சென்ற கடற்படைப் படகுகள் அப்படகுகளை சுற்றி வளைத்தபோது அந்தப் படகிலிருந்து ஆர்.பி.ஜி மற்றும் இலகுரக ஆயுதங்கள் மூலம் கடற்படை யினரின் படகுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. கடற்படையினர் பதில் தாக்குதல் நடத்தியதில் விடுத லைப் புலிகளின் படகுகள் தீப்பிடித்து எரிந்து நாச மாகின. ஒரு படகில் நால்வர் இருந்தனர் .மற்றுமொரு படகில் 2 பேர் இருந்தனர். படகுகள் முற் றாக எரிந்து நாசமாகின. இந்தச் சம்பவத்தில் மீன வர்களுக்கோ கடற்படையினருக்கோ எவ்வித சேதமும் ஏற்பட வில்லை எனவும் கடற்படைப் பேச்சாளர் டி.பி. கே.தஸநாயக்க தெரிவித்தார். (ந-5)

# இலங்கைக்கு வழங்கிய 15 மி. யூரோ வட-கிழக்கு மக்களுக்கே பயன்படும்

### ஐரோப்பிய ஒன்றியம் தகவல்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள 15 மில்லியன் யூரோ உதவித் தொகை இலங்கையில் வன்முறையால் பாதிக்கப்பட்ட வடக்கு -கிழக்கு மக்களுக்கு வழங்கப்படும்.

அதில் ஒரு பகுதி அகதியாகச் சென்று தமிழ் நாட்டில் தங்கியிருப்போருக்கு வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிராந்திய அலுவலகத் தலைவர் பீட்டர் பட்ஜர்ஸ் தெரிவித்தார். இலங்கையில் பெரும்பாலான நிதியுதவி அவசரகால தங்குமிடங்கள், குடிநீர், சுகாதாரம், பாதுகாப்பிற்காக செலவிடப்படும்.

இந்நிதியானது 50 சதவீதம் தன்னார்வ தொண்டு அமைப்புக்கள் மூலமாகவும் 20 சதவீதம் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள் மற்றும் 30 சதவீதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலமாகவும் வழங்கப்படுமெனத் தெரிவித்தார்.

அரசினூடோ அல்லது வன்முறையால் தொடர்புடைய எந்த தரப்பினரூடோ உதவி இல்லாமல் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஊடாகவே இவ் உதவிகளை வழங்குகிறோம்.

தமிழ் நாட்டில் அங்கீகாரம் பெற்ற முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு மாநில அரசின் அனுமதியுடன் உதவிகள் வழங்கப்படுமெனவும் சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் குடிநீர் முக்கியத்துவம் அளிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

# யுத்தம் வேண்டவே வேண்டாம்...

***முன்னாள் வான்படைத் தளபதி ஏயார் வைஸ் மார்சல் ஹரி குணதிலக***

முழு உலகும், எமது நாட்டின் பெரும்பான்மையினரும் இந்தப்பிரச்சினையை யுத்தத்தினால் தீர்க்க முடியாது என்றுதான் கூறுகின்றனர். எனினும் எமது நாட்டிலுள்ள மக்கள் தொகையில் ஒரு சிறுபிரிவினர் இந்தப் பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் எனக் கூறுகின்றனர்.

நான் நீண்ட காலம் வான்படையில் சேவையாற்றியிருக்கின்றேன். யார் ஏற்றுக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் நான் என் அனுபவத்தைக் கொண்டே இதைக் கூறுகின்றேன். எமக்கு யுத்தம் செய்வதற்குப் போதுமான அளவு இராணுவத்தினர் இருக்கின்றார்களா? யுத்தம் செய்வதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு எம்மிடம் பணம் இருக்கின்றதா? என நான் அவர்களிடம் கேட்க விரும்புகின்றேன்.

இவை இரண்டுமே இல்லையென்றே நான் கூறுகின்றேன். அதனால் இந்த யுத்தத்தை எம்மைப் போன்ற நாட்டால் தாங்கிக் கொள்ள இயலாது. ஆகையால் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் அதேவேளை இந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் கொண்டு வரவேண்டும்.

1983 யுத்தம் தொடங்கிய ஆண்டில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியானது 1.7 பில்லியன் ரூபா ஆகும். இந்தத்தொகையானது 2002 ஆம் ஆண்டளவில் 60 பில்லியன் ரூபாவானது. 2002 முதல் 2004 வரையிலான காலப் பகுதிக்குள் சமாதான நடவடிக்கைகளினால் யுத்தத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 60 பில்லியன் ரூபாவிலிருந்து 58-57 பில்லியனாகக் குறைவடைந்தது.

2006 ஒகஸ்ட் வரை நாட்டின் பாதுகாப்புச் செலவீனமானது 69.5 பில்லியன் ரூபாவாக இருந்தது. 2006 ஒகஸ்ட் மாதம் முதல் 2007 மார்ச் வரை இந்த செலவானது 139.6 பில்லியன் வரை சென்றுள்ளது. அதன் பின்னர் மார்ச் மாதத்தில் விடுதலைப்புலிகள் வான் தாக்குதல் நடத்திய பின்னர் எமது வான் படையினர் அதற்கு முகம் கொடுப்பதற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டது.

எமது கருத்துக்கேற்ப இந்தச் செலவுகளுடன் 2007 ஆம் ஆண்டு இறுதியில் பாதுகாப்புச் செலவீனங்கள் 200 பில்லியன் வரை அதிகரிக்கும். நான் வான்படைத் தளபதியாக இருந்த காலப் பகுதியில் வான்படைக்கு ஒரு வருடத்திற்கு வரவு–செலவுத் திட்டத்தில் 300 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டது. இன்று அது ஒரு நாளைக்குச் செலவாகின்றது. இதுதான் யுத்தத்தின் உண்மையான நிலை.

யுத்தம்செய்ய வேண்டும் எனக் கூறுபவர்கள் இவற்றை அறிவார்களா? என எனக்குத் தெரியாது. மற்றையது இந்திய விவகாரத்தைக்கவனத்தில் கொள்ள வேண்டும். அண்மையில் எமது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் மகிந்தவின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷவும் இந்தியாவுக்குச் சென்று அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் அந்தோனியையும் அந்நாட்டுப் பாதுகாப்புச் செயலாளரின் ஆலோசகர் எம்.கே. நாராயணனையும் சந்தித்தனர்.

அவ்விருவரும் என்ன சொன்னார்கள்? நாம் உங்களுக்கு ஆயுதங்களைத் தருகின்றோம். ஆனால் அவை பாதுகாப்புக்கே தவிர தாக்குதல் நடத்துவதற்கல்ல என்றார்கள். அதனால் மல்ரி பெரல் றொக்கெட் லோஞ்சர் கேட்க வேண்டாம் எனத் தெரிவித்தனர்.

அதனால் கிழக்கு வெற்றியுடன் யுத்தத்தை வடக்கிற்குத் திருப்பினால் இந்தியா அதற்கு இடமளிக்காது. அது நிச்சயம். அதனால் இந்த யுத்தம் வேண்டுமெனக் கூறுபவர்கள் அதனைப் பற்றியும் எண்ணினால் நல்லது. எனது கருத்து உடனடியாக அரசியல் தீர்வைப் பெற பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட வேண்டும் என்பதாகும். அதுதவிர இதற்கு வேறு தீர்வு கிடைக்காது.

***முன்னாள் வான்படைத் தளபதி ஏயார் வைஸ் மார்சல் ஒலிவர் ரணசிங்க***

1983 ஆம் ஆண்டிலிருந்து இந்த இனப் பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் காலத்திற்குக் காலம் நிலவி வந்துள்ளது.எனினும் இதுவரை அதனை முடிபிற்குக் கொண்டு வர முடியாது போயுள்ளது. யுத்தத்தினால் தீர்ப்பதற்கு முயன்று எமக்குப் பல விடயங்கள் இல்லாமல் போயுள்ளன.

எனினும் சிலர் யுத்தத்தையே வேண்டுகின்றனர். யுத்தத்தின் மூலம் தீர்வைத் தேடுபவர்கள் இன்னும் உள்ளனர். இதில் சிக்கல் என்னவென்றால் யுத்தத்தைவேண்டி நிற்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் யுத்தம் தொடங்கப்பட்ட காலத்தில் சிறுவர்களாக இருந்தவர்களே.

யுத்தம் வேண்டும் என்பவர்களுக்கு யுத்தத்தைப் பற்றிய எவ்வித அனுபவமும் இல்லை. அதிலிருக்கும் சிக்கல்கள் என்னவென்பதை அவர்கள் அறியாதவர்கள். யுத்தம் செய்தவர் என்ற வகையிலும் அதனை வழிநடத்தியவர் என்ற வகையிலும் இவர்கள் எதற்காக யுத்தத்தைக் கோருகின்றனர் என என்னால் எண்ணிப் பார்க்க முடியாதுள்ளது.

யுத்தத்திற்குச் செல்லும் சிப்பாய் எங்கோ ஒரு தூரத்தில் இருக்கும் கிராமத்தில் பெரும் பொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுக்கும் ஒருவராவார். ஏதேனும் ஒரு பொருளாதார பலத்தைப் பெற்றுக் கொள்வதே அவர் இராணுவத்தில் இணைந்து கொள்வதற்கான முதல் காரணியாகும்.

அதனுள் நாடு மற்றும் இனப்பற்றும் இருக்கலாம். அவர்கள் முடிபுக்குக் கொண்டு வர விரும்புவது யாரை? வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களையா? இல்லை. எமது நாட்டில் வாழும் தமிழ் மக்களையே. ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் இடையில் இடம்பெறும் யுத்தம் அல்ல இது.

இந்த யுத்தத்தை விரும்புவர்களையிட்டு நான் ஆச்சரியமடைகின்றேன். யுத்தத்தின் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமாயின் அதற்கு முதலில் இணங்குவது முப்படையினராகும். எனினும் இந்த 25 வருடங்களில் எவ்வளவோ உயிர்களும் சொத்துக்களும் அழிந்து போயுள்ளன. அவர்களுக்கும் அப்படியே.

பிரச்சினைகளுக்கு, சிக்கல்களுக்கு ஆயுதங்களின் மூலம் தீர்வு காண முடியாது. நாம் பல தசாப்த இராணுவ அனுபவங்களைக் கொண்டே இவற்றைக் கூறுகின்றோம். பொய்யாக வீரக் கதைகளை எம்மாலும் கூற முடியும். அதனை இப்பொழுது மிக இலகுவாக செய்யலாம்.

ஏனெனில் நாம் இப்பொழுது இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றவர்களாவர். யுத்தம் வேண்டும் எனக் கூறுபவர்களோ அவர்களின் உறவினர்களோ இராணுவத்தில் இல்லை. யுத்தத்திற்குச் செல்வது கிராமப் புறங்களிலிருக்கும் அப்பாவி இளைஞர்களே. இது வடக்கிற்கும் ஏற்புடையதே.

நான் வான்படையில் சேவையாற்றிய காலத்திலிருந்து அந்தந்த அரசியல் தலைவர்களிடம் இந்தப் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைக் கொண்டு வருமாறே கூறினேன். ஆனால் இன்று வரையில் அதற்கு நியாயமான தீர்வு கிடைக்கவில்லை.

எமது கடந்த கால யுத்த வரலாற்றைப் பார்த்தோமானால், நாம் அடித்துப் பெறுவோம். மீண்டும் தோல்வியடைவோம். மீண்டும் அடிப்போம். மீண்டும் தோற்போம். இதுதான் இப்பொழுதும் நடைபெறுகின்றது. இதில் முடிபேயில்லை. அழிவு மட்டுமே ஏற்படும்.

யுத்தத்தை வென்றிருப்பதாக பொதுமக்களுக்குக் காண்பிக்க முயல்வதே இப்போது நடக்கிறதே தவிர நாட்டிற்கு வெற்றி பெறுவதைக் காண்பிப்பதல்ல. இவை இன்றைய நாளுக்காக செய்யப்படுவதேயன்றி நாட்டிற்காக செய்யும் வெற்றிகள் அல்ல. இதுதான் எந்நாளும் நடைபெறுவது.

***முன்னாள் வான்படைத் தளபதி ஏயார் வைஸ் மார்சல் டி.சி.பெரேரா***

ஓரிரு வெற்றிகளைப் பெறுவதால் இந்த பிரச்சினையை யுத்தத்தினால் தீர்த்துக்கொள்ளலாம் என்று நினைத்தால் அது பிழையாகும். பயங்கரவாதம் தோற்கடிக்கப்படவேண்டும். அதனை அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம் எனினும் யாரும் எண்ணிப் பார்க்காத விடயம்தான் ஏன் பயங்கரவாதம் தொடங்கியது என்பது.

இராணுவத்தால் பயங்கரவாதத்ததை கட்டுப்படுத்த முடியும். எனினும் அதனை முடிபிற்கு கொண்டு வரமுடியும் என நான் எண்ணவில்லை. அதனை இந்த நாட்டினை ஆள்பவர்களே செய்யவேண்டும். பிரபாகரனையோ விடுதலைப் புலிகளையோ அழிப்பதால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அதனை யுத்தத்தை வேண்டுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவேற்றுவதன் ஊடாகவே இதனை முடிவிற்கு கொண்டுவர முடியும். குடும்பிமலை வெற்றியுடன் வடக்கிலும் தாக்குதல் நடத்தி இதனை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென சிலர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கின்றனர். இது கெரில்லா இயக்கத்துடன் செய்யும் யுத்தம்.

அவர்கள் நாட்டின் எல்லா இடத்திற்கும் இந்த யுத்தத்தை கொண்டுசெல்கின்றனர். தமிழ் மக்களும் அவர்களுக்கு உதவுகிறார்கள். இவ்வாறு யுத்தம் செய்யச் சென்றால் மேலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுடன் மறைமுகமாக சம்பந்தப்படுவார்கள்.

மீண்டும் அரசியல் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட வேண்டும். எமது பக்கத்திலிருந்து இன்னும் இதற்கு தீர்வு முன்வைக்கப்படவில்லை. அந்தத் தீர்வு தமிழ் மக்களுக்கு நியாயம் ஏற்படுத்துவதாக அமைய வேண்டும்.

பயங்கரவாதத்தை தோற்கடிப்பது போன்று எமது அரசியல பக்கத்திலிருந்து இதற்கான தீர்வு இல்லை? தமிழ மக்கள எப்படி எம்மீது நம்பிக்கை வைப்பார்கள்? அவ்வளவு அடித்தோம் இவ்வளவு அடித்தோம் என்பதே இந்த 25 வருடங்களில் நாம் சொல்லியிருப்பது.

யுத்தத்தை வேண்டுபவர்களுக்குத் தேவை இந்த நாட்டை இன்னுமொரு பலஸ்தீனமாக்குவதற்கா? இல்லையேல் ஆப்கானிஸ்தானாக்குவதற்கா? நாம் எமது அனுபவங்களைக் கொண்டே இவற்றை கூறுகின்றோம்.

இந்தப்பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்க்க முடியாது என்றே நான் மீண்டும் கூறுகிறேன். முடியும் என்று நினைப்பார்களாயின், கூறுவார்களாயின் அவர்களை யுத்தம் செய்ய அனுப்ப வேண்டும்.

யுத்தம் செய்ய வேண்டும் எனக் கூறுபவர்கள் மிகச் சொற்பமானவர்களே. இந்த சொற்பமானவர்கள் கூறும் விடயங்களால் தமிழ் மக்கள் எம்மிடமிருந்து விலகிச் செல்லல் மேலும் அதிகரிக்கக் கூடாது. இந்த நாட்டின் முட்டாள் அரசியல்வாதிகள்தான் யுத்தம் தீர்வென்று கூறுகின்றனர்.

பௌத்த மதகுருமாரும் யுத்தம் வேண்டும் எனக் கூறுவதைத்தான் என்னால் நினைத்துப் பார்க்கவும் முடியாதுள்ளது. நாம் படையில் பணியாற்றிய காலத்தில் எமது நண்பர்களாகத் தமிழர்கள் இருந்தனர். இன்றும் அந்த நட்பு இருக்கின்றது. நாம் எமது சேவையைச் செய்தோம். சண்டித்தனமான கதைகளைக் கூறவில்லை. நாம் அரசியல்வாதிகளின் வேலைகளைச் செய்யவும் போகவில்லை.

நாம் இப்பொழுதாவது இந்தக் குழியிலிருந்து வெளியே வரவேண்டும். இல்லையேல் இந்தப் பிள்ளைகளுக்கு எதிர்காலம் இருக்காது. இந்த யுத்தத்தினால் இலட்சக் கணக்கானவர்கள் அநாதையாகியுள்ளனர்.

இவ்விதம் தொடர்ந்து சென்றால் இந்த நாட்டை ஒரு கொடிய நாடாக அனைத்துலகம் தீர்மானிக்கும். அதனால் யுத்தத்தை வேண்டுபவர்களை அவ்வளவு பொருட்படுத்தத் தேவையில்லை. (ந-5)

# பிரபாகரனின் தேவை...

குற்றஞ்சாட்டினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த அரசாங்கத்தை கவிழ் த்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்கின்றார். ரணில் தலைமையிலான அரசாங்கம் இந்த நாட்டை மீண்டும் நாசமாக்குவதற்கு மக்கள் ஒரு போதும் இடமளிக்க மாட்டார்கள். பிரபாகரனுக்கு தேவையானவற்றை ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் முக்கியஸ்தர்களான மங்கள சமரவீர, சிறிபதி சூரியா ராச்சி ஆகியோர் மேற் கொண்டு வருகின்றனர்.

கிழக்கை மீட்டெடுத்துள்ள படையினர் வடக்கு நோக்கி நகர்வதற்கு தயாராகும் போது தெற்கில் மாற்று சிந்தனைகளை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றனர். அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்பதுடன் மக்கள் அவர்களின் கருத்துக்களின் பின்னால் செல்ல மாட்டார்கள் என்றும் கூறினார். (ந-5)

**NEW CITY WORK SHOP**

சகலவிதமான T.V., ரேடியோ, கிறைண்டர், சார்ஜர் லைற் மற்றும் மின்சார உபகரணங்கள் சிறந்த முறையில் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

நியூ சிற்றி வேர்க் ஷொப்

135, கஸ்தூரியார் வீதி,
(குளத்துக்கு முன்பாக)யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.222 3226

(C-247)

## பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள் (ஆண்கள்) (க.பொ.த.(உ/த) சித்தி)
- கணனி பக்க வடிவமைப்பாளர்கள் -பெண்கள் (அனுபவமுள்ளவர்கள் மட்டும்)

*முக்கிய குறிப்பு:*-யாழ்.நகரிலிருந்து 6 கிலோ மீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் பிற்பகல் 3 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

-நிர்வாக உத்தியோகஸ்தர்

*வலம்புரி*
*இல.3 ,2-ம் ஒழுங்கை*
*பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

## அலுவலக உபகரணங்கள் வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

மாவட்டச் செயலக, பிரதேச செயலக தேவைகளுக்காக பின்வரும் பொருட்களைப் பெறுவதற்குப் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. பொருட்களை, கொழும்பில் வழங்குவதற்கான கூறு விலைகளும், அவற்றை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் வழங்குவதற்கான கூறு விலைகளும் தனித்தனியாகக் கொடுக்கப்பட வேண்டும். மேலும் கணணிகள், கணணிப் பதிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்ட பின்னர் அதற்கான வழங்கலுக்குப் பிந்திய திருத்த சேவைகள் யாழ்ப்பாணத்தில் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

Computer, Printer, UPS, Stabilizer, Refrigerator ஆகியவற்றின் உற்பத்தி சம்பந்தமான (Made, Capacity, Specification, Branded or assemble, warranty) பற்றிய முழுமையான விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

பொருட்கள்:-

1. Computers
2. Laser Printer
3. Dot Metric Printer (Large)
4. Dot Metric Printer (Small)
5. UPS
6. Stabilizers
7. Refrigerator

கேள்விகள் யாவும் 20.08.2007 பிற்பகல் 2.30 மணிக்கு மூடப்பட்டு பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும். கேள்விகள் யாவும் தலைவர், கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்று விலாசமிட்டு பதிவுத் தபால் மூலமாகவோ, நேரடியாக இப் பணிமனையிலுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அலுவலக உபகரணங்கள் வழங்குவதற்கான கேள்விகள்' என்று குறிப்பிடப்பட வேண்டும்.

கே.கணேஷ்
தலைவர், கேள்விச் சபை,
அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளரும்
யாழ்.மாவட்டம்.

(C-251)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.